1990 மார்ச் 31]

எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது ? ஒவ்வொரு சங்கமும் எவ்வளவு தொகை இந்த நலக் காரியத்திற்காக வழங்கலாம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க வெள்ளி விழா நினைவு அரசு உயர்நிலைப் பள்ளிக்காக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் 2,000 ரூபாய் வீதமும், மத்திய மற்றும் தலைமைச் சங்கங்கள் 5,000 ரூபாய் வரையிலும் செலவு செய்துகொள்ளலாம். அதற்கு மேற்பட்ட தொகை செலவு செய்ய வேண்டுமானால் பதிவாளர் அனுமதி பெற்றுத்தான் அந்தந்த சங்கங்கள் அந்தந்த இனங்களுக்குச் செலவிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைமலை நகரில் வீட்டுமனை மற்றும் எல். ஐ. ஜி. வீடுகளின் விலை.

*3409—திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மறைமலை நகரில் வீட்டுமனை மற்றும் எல்.ஐ.ஜி. வீடுகளின் விலையை 100 சதவீதமாக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உயர்த்தி இருப்பதைக் குறித்து, அந்நகர் வாழ் மக்களின் Arbitration கோரிக்கை மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே,

மறைமலை நகரில் வீட்டுமனை மற்றும் எல்.ஐ.ஜி. வீடுகளின் விலையை 100 சதவிகிதம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உயர்த்தியிருப்பதைக் குறித்து அந்நகர் வாழ் மக்களிடமிருந்து (Arbitration) கோரிக்கை ஏதும் இக்குழுமத்திற்கு வரவில்லை. ஆனால், விலை ஏற்றம் குறித்து ஒதுக்கீட்டுதாரர்கள் தொடுத்த வழக்கு ஒன்று செங்கல்பட்டு முனிசீப் கோர்ட்டில் உள்ளது. கோர்ட்டின் தீர்ப்பிற்குப்பின் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விலையேற்றத்திற்குக் காரணமான ஒரு அம்சம், மறைமலை நகருக்குப் பாலாற்றிலிருந்து குடிநீர் கொண்டு வர திட்ட மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 4.15 கோடி, அங்கே மனைகள், வீடுகள் வாங்கிய மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது என்று நான் அறிகிறேன். குடிநீர் விநியோகத்திற்கான செல

வைப் பொதுவாக அரசோ அல்லது உள்ளாட்சி நிறுவனமோ ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது வழக்கில் உள்ள ஒன்று. அதைத் தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம் 20 (6) (ஏ) மற்றும் 25 (4) (ஏ) பிரிவுகள் வலியுறுத்துகின்றன. இச் செலவினை அரசு ஏற்க வேண்டுமென்கின்ற எம்.எம்.டி.ஏ.வின் கோரிக்கை முந்தைய அரசால் நிராகரிக்கப்பட்டதன் காரணத்தால்தான் இந்த விலை உயர்வு செய்யப்பட்டதாக அறிகிறேன். அது உண்மையானால் அது குறித்து இப்போதைய அரசு மறுபரிசீலனை செய்யுமா? இந்த அரசின் நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

9-45 மணி

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வீட்டினுடைய மதிப்பு என்பது வீட்டுமனையும் அந்தக் கட்டிடமும் சேர்ந்து 18 ஆயிரம் ரூபாய் என்று தோராயமாகக் கணக்கிடப்பட்டது. ஆனால், வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் இந்த விலை உயர்வுக்கு அந்த வீட்டுமனையும், அந்தக் கட்டிட மதிப்பும், வசூல் செய்கின்ற நிர்வாகச் செலவு எல்லாம் சேர்த்து ரூ. 34,382 என்று கணக்கிடப்பட்டு இருக்கின்றது. ஆனால், விலை உயர்வுக்குக் காரணம் சிமெண்ட், ஸ்டீல் போன்ற கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு என்றும், ஒவ்வொரு வீட்டுக்கும் குடிநீர் வழங்குவதற்கு, வாட்டர் மீட்டர் பொருத்துவதற்கு 500 ரூபாய் செலவிடப்பட்டு இருக்கின்றது என்றும் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் கொடுக்கப்பட்டு இருக்கின்றது.

திரு. உ. ரா. வரதராசன் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, வீட்டின் விலை உயர்வுக்கு வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் சொல்வது காரணமாக இருக்கலாம். ஆனால், வீட்டு மனை விலையே பெரு மடங்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதோடுகூட தாம்பரம் சானடோரியத்திலுள்ள எம்.இ.பி. இஸட் வணிகப் பகுதிக்கு இந்தத் திட்டத்திலிருந்துதான் குடிநீர் வழங்கிய போதிலும் முதலீட்டுச் செலவை அந்தப் பகுதி எம்.இ.பி. இஸட் வணிகர்களிடமிருந்து வசூலிக்கப்படாது மறைமலை நகர் மக்கள் மீது மட்டும் அந்தச் செலவு சுமத்தப்பட்டு இருப்பதை இந்த அரசு அறியுமா? இச்செலவினை அரசோ அல்லது உள்ளாட்சி மன்றமோ ஏற்று மனைகள், வீடுகள் விலையைக் குறைக்க இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு ; மாண்புமிகு தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக வழக்கு ஒன்று நடைபெற்றுக் கொண்டு இருப்பதால் அந்த வழக்கினுடைய தீர்ப்பைப் பொறுத்து மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1990 மார்ச் 31]

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மறைமலை நகர்ப் பகுதியில் எம்.எம்.டி.ஏ. மூலம் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன? ஹவுசிங் போர்டு மூலம் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன? அந்த இரண்டு பகுதிகளிலும் விற்கப்படாமல் அல்லது வாடகைக்கு விடப்படாமல் காலியாக இருக்கின்ற வீடுகள் எத்தனை என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 504 வீடுகளும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு 30 வீடுகளும் கட்டப்பட்டு இருக்கின்றன. இந்த வீடுகளில் 216 வீடுகள் 1981-ஆம் ஆண்டிலும், 288 வீடுகள் 1982-ஆம் ஆண்டிலும் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. அந்தப் பகுதியில் காலியான வீடுகள் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீடு தொகை.

*4047—திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்படும் காப்பீடு தொகை ரூ. 3,000-ஐ மேலும் உயர்த்தித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், உயர்த்த உத்தேசித்துள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நெசவாளர்கள் காப்புறுதித் திட்டத்தின் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் நிதிநிலை அறிக்கையில், அவர்களுக்கு 3 ஆயிரத்தில் இருந்து 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்குத் தரப்படுகிற இந்தத் தொகை 3 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரமாக உயர்த்தித் தந்ததமைக்காக, நெசவாளர்கள் மீது அக்கறை கொண்டு அவர்களுக்காகவே பாடுபட்டுக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர்......

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS